# இலங்கை புகையிரத திணைகளத்தின் சொந்தமான சியபத் செவன கட்டிடத்தொகுதியில் அறைகள் குத்தகைக்கு விடுவதற்கான பெறுகை அறிவித்தல்

இலங்கை புகையிரத திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ் காணும் சியபத் செவன அடுக்குமாடி கட்டிடத்தொகுதியில் அறைகள், இரு வருட காலத்திற்கு விற்பனை சேவையை நடத்தி செல்வதற்காக கீழே தரப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் அனுபவம் உள்ள கேள்விதாரர்களிடம் இருந்து முத்திரை இடப்பட்ட பெறுகைக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன

| இலக்கம் | அறைகள் | அளவு (சதுர அடி) | குறைந்த மாதாந்த குத்தகைப்பணம் | மீளளிக்கப்படும் கேள்விப்பிணை |
|---|---|---|---|---|
| 1. | 1ம் மாடி | 243 | 10,000.00 | 5,000.00 |
| 2. | 2ம் மாடி | 243 | 10,000.00 | 5,000.00 |
| 3. | 3ம் மாடி | 214 | 8,500.00 | 5,000.00 |
| 4. | 4 ம் மாடி | 214 | 8,500.00 | 5,000.00 |
| 5. | Ground floor 1 - 13 வரை (ஒரு அரை குத்தகைக்கு எடுப்பதற்கு) | 80 | 2,500.00 | 2,000.00 |

**.01தகைமைகள்**

சியபத் செவன அடுக்குமாடி கட்டிடத்தொகுதியில் வசிக்கும் புகையிரத திணைக்கள ஊழியர்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும். மற்றும் திணைக்களத்தின் நிபந்தனைகளுக்கு அமைய கட்டிடத்தொகுதிகள் குத்தகைக்கு வழங்கப்படும்.

02. **கேள்வி விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளல்.**

பெறுகை ஆவணங்களை 2022 ஒக்டொபர் மாதம் 13 ம் திகதி பி.ப 2.00 மணி வரை புகையிரத வர்த்தக மற்றும் சந்தை படுத்தல் அலுவலகத்தில் பெற்று கொள்ளலாம். அதற்காக கொழுப்பு-10, இலங்கை புகையிரத சேவையின் பிரதம நிதி அதிகாரியிடம் மீளளிக்கப்படாத கேள்விபடிவக் கட்டணமாக ரூ. 2500/- தொகையைச் செலுத்தி பெறுக்கொள்ளும் பற்றுச்சீட்டை புகையிரத தலைமையத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட அறைகள் குத்தகைக்கு எடுப்பதாக இருப்பின், அதற்காக தனித்தனி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டும். மற்றும் கேள்விப்படிவக் கட்டணத்திற்கு மேலதிகமாக அந்த அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படும் கேள்விப்பிணையையும் செலுத்துதல் வேண்டும்.

03. **கேள்வி விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல்** .

மேற்படி இரண்டாம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகளை முறையாக பூர்த்திசெய்து இரு உரைகளில் இட்டு முத்திரையிட வேண்டும். அவ்வுரைகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வுரைகள் இரண்டையும் ஒரு உரையில் இட்டு அதன் இடதுபக்க மேல்மூலையில் உணவகத்தின் கேள்வி இலக்கம் மற்றும் உணவகத்தின் பெயரை குறிப்பிட்டு , "சியபத் செவன அடுக்குமாடி கட்டிடத்தொகுதியில் அறைகள் குத்தகைக்கு விடுவதற்கான கேள்விப்பத்திரம்" என்று குறிப்பிட்டு அவ்வுரையை முத்திரையிட்டு 2022 ஒக்டொபர் மாதம் 14ம் திகதி பி.ப 2.00 க்கு கிடைக்கக் கூடியதாக தலைவர் , திணைக்கள பெறுகைக்குழு , விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகம், புகையிரத தலைமையகம் ஒல்கொட் மாவத்தை , கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம். அல்லது புகையிரத தலைமையகத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளரின் உத்தியோகபூர்வ அறையில் கேள்விப்பத்திரங்கள் உள்ளிடுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள விசேட கேள்விப்பெட்டியில் உள்ளிடலாம். அந்த நேரத்தின் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

04. **கேள்வி ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல்**.

2022 ஒக்டொபர் மாதம் 14 ம் திகதி பி.ப 2.00 க்கு மேற்படி மூன்றாம் பந்தியில் தரப்பட்டுள்ள விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளரின் அறையில் விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரி அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி சமூகமளிக்க அனுமதிக்கப்படும்.

05. இலங்கைப் புகையிரத சேவையின் சகல ஊழியர்களுக்கும் மற்றும் அவர்களது குடும்பத்தின் நெருங்கிய அங்கத்தவர்களுக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு உரிமை இல்லை.

06. கேள்விகளை கோருவதற்கு முன்னர் மேற்படி கட்டிடத்தொகுதிகளை பரீட்சிப்பதற்காக விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பங்கள் அளிக்கப்படும். அத்துடன் அதற்காக பண்டாரவளை புகையிரத நிலையத்திலிருந்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

07. திணைக்கள பெறுகைக்குழுவின் தீர்மானம் கடைசித் தீர்மானமாக இருக்கும்.

08. கேள்விதாரர்களுக்கு தேவையான மேலதிக விவரங்களை இலங்கை புகையிரத சேவையின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தொ.பே .இல - 011 2421281 (நீடிப்பு - 8235, பெக்ஸ் - 011 2431909)

தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு ,
புகையிரத தலைமையகம்,
ஒல்கொட் மாவத்தை ,
கொழும்பு 10